# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.06.01

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 17 / 2016 (v)**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிருவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016**

2017.02.13 ஆம் திகதிய 17/2016 (ii) ஆம் இலக்க, 2017.04.27 ஆம் திகதிய 17/2016 (iii) ஆம் இலக்க, மற்றும் 2017.08.03 ஆம் திகதிய 17/2016 (iv) ஆம் இலக்க, ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் ஊடாக பின்னர் திருத்தப்பட்ட 2016.12.05 ஆம் திகதிய 17/2016 ஆம் இலக்க, மற்றும் 2016.12.08 ஆம் திகதிய 17/2016 (i) ஆம் இலக்க, ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் ஊடாக அமுல்படுத்தப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக 2016.08.18 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கச் செய்யப்படுகின்றது.

02. 2016.08.18 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை - I இன் II ஆம் பக்கத்தில் ‘பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆளணி மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் சம்பள அமைப்பு’ எனும் தலைப்பின் கீழ் காணப்படும் அட்டவணையின் 4 முதல் 21 வரை குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்களை திருத்தியமைப்பதற்கு 2018.01.16 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகாரம் வழங்கப்பட்டதாக 2018.02.23 ஆம் திகதிய 04/2016(i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஊடாக நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் திறைசேரிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

03. அதற்கமைய, 04/2016 (i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் **அட்டவணை I-A** இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அவ்வாறான சம்பள அளவுத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதுடன், 2018.01.01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் பிரகாரம் கவனத்திற்கொள்ளப்படும் ஆளணிப் பிரிவுகளின் சம்பள மாற்றங்களுடன் தொடர்பான சம்பள மாற்றல் அட்டவணை **அட்டவணை II-A** ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

04. 04/2016 (i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஊடாக பல்கலைக்கழக சம்பள அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட திருத்தங்களைக் கவனத்திற்கொண்ட ஆணைக்குழுவானது 2018.05.24 ஆம் திகதி நடைபெற்ற தனது 987 ஆவது கூட்டத்தொடரின்போது 2018.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் பல்கலைக்கழக முறைமையில் அதனை அமுல்படுத்துவதற்குத் தீர்மானித்தது.

05. 04/2016 (i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை **இணைப்பு I** இன் ஊடாக முன்வைக்கப்படுகின்றது. 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இல் 4 முதல் 21 வரை இலக்கமிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்களை மறுசீரமைக்கும் 04/2016 (i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் **அட்டவணை I-A** இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டங்களைக்கொண்ட ஆளணியின் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பளங்களை 2018.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் திருத்தியமைப்பதற்கு உயர்கல்வி நிறுவகம் / நிறுவகங்களுக்கு இத்தால் அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது. இந்த அலுவலுக்காக **அட்டவணை II-A** ஊடாக வழங்கப்பட்டுள்ள சம்பள மாற்றல் அட்டவணையைப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

06. **அட்டவணை I-A** இல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களின் கீழான பதவிகளின் ஒவ்வொரு சம்பளக் குறியீடுகளுடன் தொடர்பாக தயாரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்கள் **இணைப்பு II** ஊடாக முன்வைக்கப்படுகின்றது.

07. திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 17/2016 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகள் மாற்றங்களின்றி செயல்வலுப்பெறும்.

08. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம் / பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/9/86 (16 ஆவது தொகுதி)